அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. /                RCOP: 38 /2012

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.                என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு ஜூன் திங்கள் 02–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

எ.ம.சா.1                02.06.2025

பெயர் ராஜா                தந்தை பெயர் முருகன்

தொழில்                வயது

இனம்                சமயம்

கிராமம்                வட்டம்

<u>குறுக்கு விசாரணை</u>:– ஆதியில் தபசில் சொத்து பாலு என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவரிடம் இருந்துதான் வாடகை ஒப்பந்தம் செய்து ராஜா பைக் நீட்ஸ் என்ற கடை நடத்திவருகிறேன் என்றால் சரிதான். கடையின் அளவு மொத்தம் 120 சதுரஅடி என்றால் சரிதான். ஆதியில் வாடகை ரூபாய் 2000 என்றால் சரிதான். ஒப்பந்ததின் படி மாதத்தில் 5 ம் தினத்திற்குள் வாடகை செலுத்தவேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான். 2011 ம் வருடத்தில் இருந்து ரூபாய் 4500 ஆக வாடகை செலுத்திவருகிறேன். ரூபாய் 1 1/2 லட்சம் அட்வான்ஸ் தொகையாக கொடுத்துள்ளேன். மேற்படி ரூபாய் 1 1/2 லட்சம்மானது ஏற்கனவே கொடுத்த ரூபாய் 50,000 அட்வான்ஸ் தொகையை சேர்த்து சொல்கிறேன் என்றால் சரிதான்.

ம.ச.ஆ.3 மனுதாரரால் எனக்கு 07.04.2012 அன்று அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் பாலு என்பவரிடம் இருந்து 23.11.2011 அன்று கிரையம் பெற்று விட்டதாகவும் வாடகை ஒப்பந்தத்தை மனுதாரரிடம் ஏற்படுத்திக்கொள்ளுமாறு அறிவிப்பு அனுப்பட்டுள்ளது என்றால் அறிவிப்பில் அவ்வாறு தான் உள்ளது. நான் அதற்கு 09.04.2012 தேதியில் ம.ச.ஆ 4 பதில் அறிவிப்பு கொடுத்தேன் அதற்கு பின்பு மனுதாரர் எந்த அறிவிப்பும் எனக்கு அனுப்பவில்லை. மேற்படி அறிவிப்பில் சொத்து வாங்கிய விவரம் பற்றி எனக்க தெரியாது என்றும் பிரிவு 109 TP Act ன் படி செல்லாது என்று மட்டும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து 04.07.2012 ஆஜராக அனுப்பப்பட்ட அறிவிப்பில் என்னுடைய கையெப்பம் உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட எதிர்மனுதாரர் சம்மன் **ம.ச.ஆ 5 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுதாரரிடம் 2012 வருடத்தில் இருந்து வாடகை செலுத்ததற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபிறகு நவம்பர் 2011 லிருந்து ஜீலை 2012 வரையில் நான் பாலு என்பவரிடம் வாடகை கொடுத்ததற்கான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. இந்நீதிமன்றத்தில் MP 149/2016 என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் 3 வது பக்கத்தில் 09.12.2016 தேதி அன்று ரூபாய் 48,000 வைப்பீடு செய்ய வேண்டும் என்று மனுதாக்கல் செய்துள்ளேன். அதற்கு முன்பு வாடகை வைப்பீடிற்கு மனுதாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் நீதிமன்ற சம்மன் கிடைத்து நீதிமன்றத்தில் 04.07.2012 அன்று ஆஜரானபோது பாக்கி வாடகை தொகையை செலுத்துவதாக சொன்னேனா என்றாலும் நீதிமன்றத்தில் வாடகை செலுத்துவற்கு வைப்பீடுமனு எதாவது

செய்தேனா என்றாலும் இல்லை. எ.ச,ஆ 7 13.11.2024, 09.08.2024, 21.02.2024, 12.01.2024 ஆகிய தேதிகளில் மாதவாடகை ரூபாய் 4500 யை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ததை காட்டும் ஆவணம் என்றால் சரிதான்.

5ம்தேதிக்குள் மாதவாடகை செலுத்தியதை காட்டும் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் 5ம்தேதிக்குள் வாடகை கட்டியுள்ளேன் ஆனால் நீதிமன்றத்தில் செல்லான் கொடுப்பதற்கு தாமதமாகி உள்ளது. 5ம் தேதிக்குள் கட்டியதை காட்டும் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் இல்லை.

மனுதாரர் எனக்கு அறிவிப்பு அனுப்பிய பிறகும் அவரிடத்தில் மாதவாடகை நான் செலுத்தவில்லை என்றால் மனுதாரரிடம் செலுத்தவில்லை நீதிமன்றத்தில் செலுத்தியுள்ளேன். நவம்பர் 2011ல் இருந்து ஜீலை 2012 வரையில் வாடகை செலுத்தியதற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனு எண் MP.150 /2016 ல் பிறப்பித்த உத்தரவிற்கு பிறகு தான் நான் நீதிமன்றத்தில் வாடகை செலுத்துகிறேன் என்றால் சரிதான். நான் 62 மாதங்களுக்கு வாடகை செலுத்தவேண்டும் என்றாலும் நீதிமன்றத்தில் வைப்பீடு மனு செய்தது 10மாதங்களுக்கு ரூபாய் 48000 மட்டும் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான்.

எனது கணக்கு படி 29 மாதங்களுக்கான வாடகை செலுத்தவேண்டியது பாக்கியுள்ளது என்றால் சரியல்ல. நான் பாக்கி தொகையை செலுத்திவிட்டேன். அதற்கான ரசீதுகளை தாக்கல் செய்ய எனக்கு காலஅவகாசம் தேவை. நான் ம.ச.ஆ 3 அறிவிப்பிற்கு பிறகும் , நீதிமன்றத்தில் ஆஜரானபோதும், மனுஅனுமதிக்கப்பட்ட பிறகும், ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் வாடகையை செலுத்த தவறியுள்ளேன்

என்பதால் நான் வாடகை செலுத்துவதில் தீங்கு விளைவித்துள்ளேன் என்றால் சரியல்ல. MP.150/2017 என்னால் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றம் அதனை தள்ளுபடி செய்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எந்த மனுவில் நான் நீதிமன்றத்தில் வடகை வைப்பீடு செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு தெரியுமா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.ச.ஆ 7 ஆவணத்தில் மேற்படி எந்த மனுவின் உத்தரவின் படி வாடகை வைப்பீடு செய்துள்ளேன் என்று குறிப்பிட வில்லை என்றால் சரிதான்.

MP.149 & 150 /2016 ஆகிய மனுக்கல் reopen and recall காரணத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாணவாக்குமூலத்தில் எந்த மனுவின் உத்தரவின் படி எவ்வாறு வாடகை பணத்தை வைப்பீடு செய்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.